**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 30-01-2024**

**கடலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2024-01-30 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2024-01-31 | 2024-02-01 | 2024-02-02 | 2024-02-03 | 2024-02-04 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 1.0 | 1.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 31.0 | 31.0 | 32.0 | 32.0 | 32.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 22.0 | 22.0 | 22.0 | 23.0 | 23.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 60 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 12 | 8 | 10 | 8 | 10 |
| காற்றின் திசை (கோணம்) | 70 | 110 | 110 | 90 | 70 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 6 | 7 | 4 | 5 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் நாட்களில் வறண்ட வானிலையே நிலவ வாய்ப்புள்ளது. அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் ஈரப்பதம் 90% ஆகவும், பகல் நேரங்களில் 50-60% ஆக இருக்க வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 31.0-32.0°C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 22.0-23.0°C ஆகவும் இருக்கும். காற்றின் வேகமானது மணிக்கு 8-12 கி.மீ ஆக வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

04.02.2024 முதல் 10.02.2024 வரை தமிழ்நாட்டில் மழை இயல்பை விட குறைவாகவும், அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பகாவும் இருக்கும்.

## குறுஞ்செய்தி :

வரும் நாட்களில் வறண்ட வானிலையே நிலவ வாய்ப்புள்ளதால், பயிர்களுக்கு மண்ணின் ஈரத்தன்மையை பொருத்து நீர்பாசனம் செய்யவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் புகையான் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. இதன் அறிகுறிகள் நீர்மட்டத்திற்கு மேலிருக்கும் பயிரின் அடிப்பகுதியில் இளங்குஞ்சுகள் மற்றும் முதிர் பூச்சிகள் ஒட்டிக்கொண்டிருக்கும். தாக்கப்பட்ட பயிர்கள் முற்றிலும் காய்ந்து "தீய்ந்தமாதிரி" காட்சியளிக்கும்.மேலும் பயிர்கள் சாய்ந்து விடும். இதை கட்டுப்படுத்த ஏக்கருக்கு பைமெட்ரோசின் 50% WG @ 120 கிராம் என்ற அளவில் ஒட்டும் திரவம் (50 மிலி / ஏக்கர் மேக்னட்/டீபால்) கலந்து தெளிக்க வேண்டும். |
| நெல் | நெற்பயிரில் மஞ்சள் கரிப்பூட்டை அல்லது லட்சுமி நோய்தாக்கம் காணப்பட்டால் அதைக்கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸிகுளோரைடு 50 WG 2.5 கிராம்/லிட்டர் அல்லது காப்பர்ஹைட்ராக்சைடு 77 WG (2.0 கிராம்/லிட்டர்) அல்லது புரோபிகோனசோல் (1.0 மி.லி/லிட்டர்) என்ற அளவில் பூட்டைப்பருவத்தில் ஒருமுறையும், 50 சதவீதம் பூக்கும் தருணத்திலும் தெளிக்க வேண்டும். |
| நிலக்கடலை | தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நிலக்கடலையில் சுருள்பூச்சியின் தாக்கம் தென்பட வாய்ப்புள்ளது. அதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு மீத்தைல் திமத்தான் 25 EC 400 மி.லி அல்லது டைமீத்தோயேட் 30 EC 200 மி.லி என்ற அளவில் தெளிக்கவும். |
| நிலக்கடலை | தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நிலக்கடலையில் புகையிலை வெட்டு புழு தாக்கம் தென்பட வாய்ப்புள்ளது இதைக் கட்டுபடுத்த இனக்கவர்ச்சி பொறி ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் வைக்கவும். ஏக்கருக்கு ப்ளுபென்டிமைட் 20 WG 120 கிராம்என்ற அளவில் தெளிக்கவும். |
| கரும்பு | கரும்பில் குருத்து மாவுப்பூச்சி மற்றும் போக்க போயிங் நோய் தாக்குதல் கரும்பு பயிரில் அதிகளவில் காணப்படுகிறது. இதன் அறிகுறிகள் வளரச்சி குன்றி, குருத்து காய்ந்து, இலைகள் மஞ்சள் நிறமாகவும் மற்றும் கரும்புகள் வலுகுன்றியும் காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகளை பின்பற்ற வேண்டும். 1. கரணைகளை கார்பன்டசிம் 50 % WP ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு கிராம் என்ற அளவில் 30 நிமிடங்கள் நனைத்த பின், இமிடாகுளோபிரிட் 70 % WS லிட்டருக்கு 1.5 மிலி என்ற அளவில் 5 நிமிடம் வரை நனைக்கவும். 2. வயல்களின் ஓரங்களில் எறும்பின் நடமாட்டத்தை கண்காணிக்க வேண்டும். 3. வரும் முன்காக்கும் முறையாக வயல் ஓரங்களில் மூன்று வரிசைவரை இமிடாகுளோபிரிட் 17.8 SL 3.0 மில்லி/10 லிட்டர் அல்லது குளோரன்ட்ரானி லிப்ரோல் 18.5 SC 4.0 மில்லி/ 10 லிட்டர் அல்லது குளோதையானிடின் 50% WDG 5.0 கிராம்/ 10 லிட்டர் அல்லது ஸ்பைரோடெட்ராமெட் 150 OD 12.5 மில்லி/ 10 லிட்டர் அல்லது புளோனிகாமிட் 50 WG 3.0 கிராம்/ 10 லிட்டர் தெளிக்க வேண்டும். 4. குருத்து மாவுப்பூச்சி 10 சதம் பொருளாதார சேதநிலையைத் தாண்டும் பொழுது 20 நாட்களுக்கு ஒருமுறை மேலே குறிப்பிட்ட பூச்சிக்கொல்லி களைசுழற்சி முறையில் ஒட்டும் திரவம் ஒரு மில்லி/லிட்டர் என்ற அளவில் சேர்த்து தெளிக்க வேண்டும். 5. போக்கபோயிங் நோய்க்கு கார்பன்டசிம் 50% WP 2.0 கிராம்/லிட்டர் அல்லது புரோபிகொனோசோல் 25% EC 2.0 மில்லி/லிட்டர் என்ற அளவில் ஒட்டும் திரவம் 1.0 மில்லி/லிட்டர் என்ற அளவில் சேர்த்து இருபது நாளைக்கு ஒருமுறை வீதம் மூன்று முறை தெளிக்க வேண்டும். 6. பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதற்கு முன்பு சோகைகளை நீக்கி இருக்க வேண்டும். 7. இரண்டு முறைக்கு மேல் மறுதாம்பு விடுவதை முடிந்த அளவு தவிர்க்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | 1. பசை தடவிய மஞ்சள் நிறப்பாலித்தீன் (25 எண்ணிக்கை/எக்டர்) தாள்களை மரத்தை சுற்றி கட்டி முதிர்ந்த ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். 2. வெள்ளை ஈக்கள் அதிகளவு பரவும் போது என்கார்ஸியா ஒட்டுண்ணிகள், காக்ஸினெல்லிட் ஒட்டுண்ணிகள் (பொறிவண்டுகள்) மற்றும் கிரைசோபெர்லா இரைவிழுங்கிகள் ஆகிய நன்மை செய்யும் பூச்சிகள் தோப்புகளில் இயற்கையாகவே உருவாக ஆரம்பிக்கும். என்கார்ஸியா ஒட்டுண்ணிகள் அதிக அளவு உருவாகி வெள்ளைஈக்களின் சேதத்தை 40 முதல் 70% அளவுக்கு குறைக்கின்றது. 3. அதிக பாதிப்பின் போது ஒரு லிட்டர் நீருக்கு வேப்பெண்ணெய் 20 மிலி அல்லது அசாடிராக்டின் 1.0 % EC 2.0 மிலி/லிட்டர் தண்ணீரில் மருந்தை ஒரு லிட்டருக்கு 1.0 மி/லிட்டர் ஒட்டும் திரவத்துடன் கலந்து தென்னை ஓலையின் அடிப்புறம் தெளிக்கவும். |